

**அ.சகாய சத்யா**
நூலகர், அய்டியாஸ், மதுரை.



# குழந்தைப் பருவம் கற்றலுக்கானது, சம்பாதிப்பதற்கானதல்ல...

இந்த உலகில் உண்மையான அமைதியை நாம் கற்பிக்க வேண்டும் என்றால், போருக்கு எதிரான உண்மையான போரை நாம் நடத்த வேண்டும் என்றால், நாம் அதைக் குழந்தைகளிடமிருந்து தொடங்க வேண்டும் என்று மகாத்மா காந்தி கூறினார்.

## குழந்தைத் தொழிலாளர்

குழந்தைத் தொழிலாளர் முறை என்பது, ஒரு குழந்தையின் கல்வி மற்றும் வளர்ச்சிக்குரிய காலத்தில், அவர்களின் உடல்நலம் மற்றும் மன நலத்திற்கு ஆபத்தை ஏற்படுத்தும் வேலைகளில் ஈடுபடச் செய்வது என்று வரையறுக்கிறது சர்வதேசத் தொழிலாளர் அமைப்பு. இந்தியாவில், 2016ஆம் ஆண்டுக் குழந்தைத் தொழிலாளர் (தடை மற்றும் ஒழுங்குமுறை) திருத்தச் சட்டத்தில், 14 வயது பூர்த்தியடையாதவர் குழந்தை என வரையறுக்கப்பட்டுள்ளது. உலகளவில் 21.5 கோடி குழந்தைகள், முழுநேரத் தொழிலாளர்களாக உள்ளனர். அவர்கள் பள்ளிக்குச் செல்ல முடியாமலும், மற்ற குழந்தைகளைப் போல விளையாட முடியாமலும் சிரமத்துக்குள்ளாகியுள்ளனர் என்கிறது யுனிசெப்.

உலகளவில் ஒவ்வொரு 10 குழந்தைகளில் ஒருவர் வேலை செய்யக் கட்டாயப்படுத்தப்படுகிறார். உலகக் குழந்தை தொழிலாளர் எண்ணிக்கையில் 12 சதவிகிதம் பேர் இந்தியாவில் உள்ளனர். இந்தியாவில் 1.2 கோடிக் குழந்தைத் தொழிலாளர்கள் உள்ளனர். அதில் 65 இலட்சம் ஆண் குழந்தைகள், 55 இலட்சம் பெண் குழந்தைகள் அடங்குவர். உத்திரப் பிரசேதம், மத்திய பிரதேசம், மகாராஷ்டிரா, ராஜஸ்தான், பீகார் மாநிலங்களில் அதிக எண்ணிக்கையிலான குழந்தைகள் தொழிலாளர்களாக மாற்றப்படுகிறார்கள். தமிழ்நாட்டில் சென்னை,

> குழந்தைகளை வேலைக்கு அமர்த்துவது சட்ட விரோதம் என்பதோடு, ஒரு சமூகக் குற்றமாகும். குழந்தைகளின் கனவுகளைக் கலைப்பதற்கு ஈடான வன்செயல் வேறெதுவுமில்லை. எந்தக் குழந்தையும் விரும்பி வேலைக்குச் செல்வதில்லை. அவர்கள் பலவந்தமாக இந்தச் சூழலுக்குள் தள்ளப்படுகிறார்கள்.


தர்மபுரி, வேலூர், திருவண்ணாமலை, அரியலூர், திருப்பூர், தூத்துக்குடி, விருதுநகர் மாவட்டங்களில் குழந்தை தொழிலாளர்கள் அதிகமாக உள்ளனர்.

## உருவாகக் காரணம்

வறுமை, நிதிச் சவால்கள், நிச்சயமற்ற பொருளாதாரம், குடும்பத்தில் வருமானம் ஈட்டுவோரின் திடீர் நோய் மற்றும் மரணம், குழந்தைத் தொழிலாளர் பற்றிய விழிப்புணர்வின்மை, கல்வியறிவுயின்மை, பாலினப் பாகுபாடுகள் போன்ற காரணங்களினாலும், மோதல்கள், பெருந்திரள் இடம்பெயர்வு, இயற்கைப் பேரழிவுகள், காலநிலை மாற்றம் போன்ற காரணங்களினாலும் குழந்தைத் தொழிலாளர்கள் உருவாக்கப்படுகின்றனர்.

தற்போது உலகில் சில நாடுகளில் நடைபெறும் உள்நாட்டு போர் மற்றும் நாடுகளிடையேயான போரால் குழந்தைகள் பாதிக்கப்படுகின்றனர். யுனிசெஃப் கணக்குப்படி, உலகில் சுமார் 15 கோடி குழந்தைகள் ஆதரவற்றவர்களாக உள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் போரினால் பெற்றோர்களை இழந்தவர்கள். சர்வதேச அளவில் இன்று, 47 கோடியே 30 லட்சத்துக்கும் அதிகமான குழந்தைகள் போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாழ்கின்றனர். அதாவது, உலகிலுள்ள ஆறு குழந்தைகளில் ஒரு குழந்தை போர்ச் சூழலில் வாழ்கிறது. இது ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகிறது என்பது கவலையளிக்கிறது. இவர்களில் கணிசமானோர் குழந்தைத் தொழிலாளர் ஆகிறார்கள். "போர்ப் பகுதிகளில் உள்ள குழந்தைகள் தங்களுடைய குழந்தைப் பருவத்தை இழக்கிறார்கள். இது 2024இல் அதிகரித்திருக்கிறது" என்கிறார் யுனிசெஃப் இயக்குநர் கேத்தரின் ரஸ்ஸல்.





## ஈடுபடுத்தப்படும் வேலைகள்

விவசாயம், வீட்டிலிருந்தவாறே பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழில்கள், நிலக்கரி சுரங்கங்கள், செங்கல்சூளைகள், கட்டுமானப்பணிகள் போன்றவற்றில் குறைந்த ஊதியத்தில், அதிக நேரம் வேலை செய்கின்றனர். மேலும், கம்பள நெசவு, ஆடை தயாரித்தல், வீட்டு சேவை, மீன்பிடித்தல், பாலியல் துஷ்பிரயோகம், இணையத்தை உள்ளடக்கிய பாலியல் சுரண்டல் உள்ளிட்ட பல்வேறு வகையான சுரண்டல்களுக்கும் ஆளாகும் ஆபத்தில் குழந்தைகள் உள்ளனர். போதைப்பொருள் கடத்துதல் உள்ளிட்ட சட்டவிரோத நடவடிக்கைகளிலும் இக்குழந்தைகளை ஈடுபடுத்தப்படுகின்றனர்.

14 வயதிற்குக்கீழ் உள்ள தொழிலாளர்கள் உலகிலேயே அதிக எண்ணிக்கையில் இந்தியாவில் உள்ளதாக யுனிசெஃப்பால் மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் வீட்டுவேலை செய்யச் செல்லும் தாய்க்கு உதவியாக இருத்தல், பிற பிள்ளைகளைப் பார்த்துக் கொள்ளுதல், சமையல் செய்தல், வீட்டைப் பராமரித்தல் என்பன போன்ற பணிகள் பெண் குழந்தைகள் மீதே திணிக்கப்படுகின்றன வீட்டு வேலை செய்யும் குழந்தைகளின் நிலை பரிதாபத்துக்குரியது. அவர்களுக்கு ஓய்வும் கிடையாது; விடுமுறையும் கிடையாது. ஆண்டு முழுவதும் உழைத்துக் கொண்டேயிருக்க வேண்டும். ஊதியமும் மிகக்குறைவு.

## அதிகரிப்பதற்கான காரணங்கள்

குழந்தைத் தொழிலாளர்கள் தான் உலகிலேயே மிகவும் மலிவான மனிதவளம். கடந்த சில ஆண்டுகளாக மோதல்கள், நெருக்கடிகள் மற்றும் கோவிட் 19 தொற்றுநோய் போன்றவை அதிகமான குடும்பங்களை வறுமையில் தள்ளியுள்ளது. இயற்கைச் சீற்றங்களின்போது பல குடும்பங்கள் வீடு, சொத்து, வாழ்வாதாரம் போன்ற அனைத்தையும் இழந்துவிடுவதால் அந்தக் குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகள் வேலைக்கு அனுப்பப்படுகின்றனர். உறவினர்கள் மற்றும் தரகர்களால் நகர்ப்புறங்களுக்கு அழைத்துச் செல்லப்படும் குழந்தைகளில் பெரும்பாலோர் கொத்தடிமைகளாக விற்கப்படுகின்றனர். இவர்கள் பெரியவர்களைவிடக் குறைந்த ஊதியத்திற்கு அதிக நேரம் வேலை செய்கிறார்கள், கேள்வி கேட்பதில்லை போன்ற காரணங்களினால் குழந்தைத் தொழிலாளர்கள் அதிகரிக்கிறார்கள்.

## குழந்தைத் தொழிலாளர் சட்டங்கள்:

தொழிற்சாலைகள் சட்டம்-1948, சுரங்கச் சட்டம் - 1952, குழந்தைத் தொழிலாளர் (தடை மற்றும் ஒழுங்குமுறை) சட்டம் - 1986, இலவச மற்றும் கட்டாயக் கல்விக்கான குழந்தைகளின் உரிமைச் சட்டம் 2009. குழந்தைத் தொழிலாளர் ஒழிப்புச் சட்டம் 1986 என்பது 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளை அபாயகரமான தொழில்களில் ஈடுபடுத்துவதைத் தடுக்கும் சட்டமாகும், இச்சட்டப்படி, 14 வயதிற்குட்பட்ட ஒரு குழந்தை விரும்பியோ அல்லது விரும்பாமலோ, பணத்திற்கோ (அ) பொருளுக்காகவோ, வேறு சூழலில், முழு நேரமாகவோ (அ) பகுதி நேரமாகவோ உழைப்பை விற்குமானால், அக்குழந்தை குழந்தைத் தொழிலாளர் ஆவார் என்கிறது.

குழந்தைகளை வேலைக்கு அமர்த்துவது சட்ட விரோதம் என்பதோடு ஒரு சமூகக் குற்றமாகும். குழந்தைகளின் கனவுகளைக் கலைப்பதற்கு ஈடான வன்செயல் வேறெதுவுமில்லை. எந்தக் குழந்தையும் விரும்பி வேலைக்குச் செல்வதில்லை. அவர்கள் பலவந்தமாக இந்தச் சூழலுக்குள் தள்ளப்படுகிறார்கள். இந்த மண்ணில் பிறந்த ஒவ்வொரு குழந்தைக்கும் பாதுகாப்பாக வாழ, சுதந்திரமாக வாழ, தரமான கல்வி கற்க உரிமை உள்ளது.

குழந்தைகளின் பாதுகாப்பை வலுப்படுத்த, கல்விக்கான அணுகலை மேம்படுத்த, சமூகப் பாதுகாப்பை வழங்க, குழந்தைத்தொழிலாளர் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 12ஆம் தேதி அன்று குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு தினம் அனுசரிக்கப்படுகிறது. ஒரே சமூகமாக அரசும், தன்னார்வ நிறுவனங்களும், மக்களும், சட்டமும் ஒன்றிணைந்து செயல்பட்டால் தான் இதனைத் தடுக்க முடியும். இன்றைய குழந்தைகள் தான் நாளைய உலகைக் கையில் எடுத்துக் கொண்டு போகிறவர்கள்.